*KALAM - International Research Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*13(2), 2020*

# சாதி முறைமையும் அதன் விளைவுகளும்: காரைநகரை மையப்படுத்திய சமூகவியல் ஆய்வு

**அ. ரமணி**
**சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டு திட்டம்**
**நீர் வழங்கல் அமைச்சு, கொழும்பு.**

**எம். றிஸ்வான்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**சமூகவியல் துறை**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.**

Correspondence: ramaniariyaratnam@ymail.com, mriswan2008@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

காரைநகர் பிரதேசத்தில் சாதி முறைமை பற்றியும், அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது. பண்புசார் ஆய்வு முறையூடாகவே இக்கட்டுரைக்கு தேவையான தகவல்கள் திரட்டப்பட்டன. நேர்காணல் மற்றும் அவதானம் போன்ற முறைகள் மூலம் பிரதான தரவுகள் பெறப்பட்டு, விபரிப்பு முறையில் பெறுபேறுகள் கலந்துரையாடப்பட்டுள்ளன. தரவுப் பகுப்பாய்வின்படி, காரைநகர் மக்கள் சாதி முறைமையினால் இன்றுவரை பல்வேறு விளைவுகளை அனுபவித்து வருகின்றமை இக்கட்டுரையில் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக, திருமண விடயங்கள், ஆலயப் பிரவேசத்தில் தடை, தண்ணீரைப் பெற்றுக்கொள்ளல், தொழில் மற்றும் நில விற்பனையில் பாகுபாடு, கலாச்சார விடயங்களில் புறமொதுக்கம், கல்வி மற்றும் சமூக அந்தஸ்தின்மை போன்ற இன்னோரன்ன வழிகளில் பல்வேறு பாகுபாடுகளும் விளைவுகளும் இடம்பெறுகின்றமை இக்கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளது. சாதி முறைமை குறித்த சில தரப்பினரை மேல்நிலையில் வைத்து அந்தஸ்து, அதிகாரம் போன்றவற்றை தக்கவைப்பதற்கும் இன்னும் சிலரை அடுக்கமைவில் கீழ் நிலையில் வைத்து நோக்குவதற்கும் காரணியாய் அமைந்துள்ளது. சாதி முறைமையை காரைநகரில் முற்றுமுழுதாக ஒழிப்பதென்பது கடினமானதொன்றாகும். ஏனெனில் சாதியானது மக்களின் மன உணர்வுடன், பண்பாட்டுடன் கலந்த ஒன்றாகவும் அவர்களின் வாழ்வியலிலிருந்து பிரிக்க முடியாத ஒன்றாகவும் காணப்படுகின்றது. எனவே இத்தகைய விளைவுகளை குறைப்பதற்கு கல்வி, விழிப்புணர்வு, அரச செயற்பாடுகள், ஏனைய நிறுவனங்களின் நடவடிக்கைகள் காத்திரமாய் அமையும்.

**பிரதான சொற்கள்:** சாதி முறைமை, சமூக அடுக்கமைவு, காரைநகர், சமூக விளைவுகள்.

## 1. அறிமுகம்

மனித இனத்தில் இருப்பதை போன்று வேறு எந்த ஓர் உயிரினத்திலும் உயிரியல் சாராத வேறுபாடுகள் மலிந்து கிடப்பதில்லை. இந்த எண்ணற்ற உயிரியல் சாராத வேறுபாடுகளை மையமாகக் கொண்டே மனிதனது வாழ்க்கைப் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. மனிதனுடைய வாழ்வின் படிமலர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஏற்பட்ட இவ் வேறுபாடுகள் உறுப்பினர்களிடையே சமநிலையின்மையையும் தாழ்வையும் ஏற்படுத்தின. அதாவது மேலேயுள்ளது உயர்ந்தது என்றும் படிப்படியாக கீழே வரும் பொழுது கீழேயுள்ளது தாழ்ந்தது என்ற ஒரு எடுகோள் உண்டு. இந்தப்படிநிலை சாதியமைப்பினை (caste system)

அடிப்படையாகக் கொண்டும் அமைகிறது (சிவத்தம்பி, 1993). சாதியமைப்பு முறை தென்னாசிய சமூகங்களுக்கான தனித்துவமான பண்பாக இருக்கிறது. சமூக, பொருளாதார, அரசியல், பண்பாடு என அனைத்துத் தளங்களிலும் இச் சமூகங்களில் சாதி கலந்திருக்கின்றது. சாதி இந்தியப் பாணியிலான சமூகத்தின் அடிப்படை அலகாகும். இதன் தனித்தன்மை பிறப்பின் அடிப்படையிலான வேலைப்பிரிப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும். சாதி முறைமையானது இந்தியா, பங்களாதேஷ், இலங்கை உள்ளிட்ட பல நாடுகளில் நிலவுகிறது. ஒருவரின் சாதி அவரின் பிறப்பைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது.

ஈ.ஏ.எச். ப்ளண்ட் (E.A.H. Blunt) என்பவர் "சாதி என்பது பிறப்பின் அடிப்படையில் தோன்றிய உறுப்பினர்களையும், ஒரு பொதுவான பெயரையும் கொண்ட அகமணக்குழு" என கூறுகின்றார். பொதுவாக ஒரே தொழிலை செய்யக்கூடிய உறுப்பினர்கள் தாங்கள் பொதுவாக ஒரு குலத்தில், ஒன்றியக் குழுவில் இருந்து தோன்றியதாகக் கூறிக்கொள்கிறார்கள் (அகத்தியலிங்கம், 2004). சாதி என்பது சமூகத்தில் ஒரு வகுப்பு. இவ்வகுப்பு இதுபோன்ற பிற வகுப்புக்களுடனான எத்தகைய தொடர்பையும் மறுதலிக்கும். எந்த ஒரு வகுப்பும் மற்ற எந்த வகுப்புடனும் திருமணம் செய்து கொள்ளவும் தன்னுடைய சொந்த வகுப்பைத் தவிர்ந்த வேறெந்த வகுப்பை சேர்ந்த எவருடனும் எதையும் உண்ணவோ அருந்தவோ விரும்புவதில்லை. குறிப்பிட்ட சாதியில் உறுப்பினராகும் உரிமை உறுப்பினர்களுக்குப் பிறந்தவர்களுக்கு மட்டுமே உரித்தாகுகின்றது. தம் குழாம் தவிர்ந்த வேறெந்த வெளிக்குழாத்தில் இருந்தும் மணம் புரிதலில் இருந்து உறுப்பினர்கள் சிறிதேனும் தளர்த்தப்படமுடியாத சமூகச்சட்டத்தால் தடைசெய்யப்பட்டிருப்பவர்களாகும் (அம்பேத்கர், 2011).

சாதி என்பது சமுதாய அமைப்பில் இயங்கும் ஒரு தனிப்பட்ட குழுவைக் குறிக்கும். இக்குழுவில் இடம்பெறும் தகுதி பிறப்பால் அமைகிறது. அதனால் ஒரு சாதியில் பிறந்தவர் வேறு சாதிக்கு மாற இயலாது. ஒன்றுக்கு மேற்பட்ட சாதியைச் சேர்ந்தவர் எனக்கூறிக்கொள்ளவும் இயலாது. பெரும்பாலும் ஒவ்வொரு சாதிக்குமென தனித் தகுதி நிலை நிர்ணயிக்கப்பட்டிருக்கும் (பக்தவத்சலபாரதி, 1999). தொகுத்து நோக்கும் பொழுது சாதி எனப்படுவது ஒரு அடைபட்ட வகுப்பாகவும், ஒவ்வொரு சாதிக்குமென தனித்தனி நியமங்கள், சட்டங்கள் கடைபிடிக்கப்படுவதாகவும், பிறப்பினை அடிப்படையாகவும் அவரவர் செய்யும் தொழிலின் அடிப்படையிலும் சாதி அமையப்பெறுகின்றது எனவும், குறித்த சாதியில் உள்ளவர்கள் திருமணச் சடங்குகளில் அகமண முறையையே பின்பற்றுகின்றனர். இச்செயன்முறையை மீறும் பட்சத்தில் சமூக புறமொதுக்கம் (social exclusion) செய்யப்படுகின்றனர் என்பது தெளிவாகின்றது.

இலங்கையில் சமூக கட்டமைப்பின் அடித்தளமாக பிறப்பை அடிப்படையாகக் கொண்ட சாதி அதிகாரப்படிநிலையே காணப்படுகின்றது. இந்த சாதிக் கட்டமைப்பு சமயம், தொழில், பொருளாதாரம் போன்ற விடயங்களில் ஒருவரின் சமூக நிலையினை நிர்ணயிக்கின்றது. இந்தியச் சாதிமுறையுடன் ஒப்பிடுகையில் இலங்கை சாதிமுறைமை தளர்ந்த நிலையில் காணப்படுகின்றது. தமிழரிடையேயான சாதியமைப்பு பிரதேச வேற்றுமையைக் கொண்டுள்ளது. யாழ்பாணத்துத் தமிழரிடையே சாதிமுறையானது ஆரம்பத்திலேயே சகல உறவுகளையும் நிர்ணயிக்கின்ற சக்தியாய் அமைந்திருந்தது.

யாழ்ப்பாணத்திலே சாதி முறைமையானது இறுக்கமானதொன்றாக பார்க்கப்படுகின்றது. தெளிவாக வரையறுக்கப்பட்ட சமத்துவமின்மை மற்றும் சாதிப்பாகுபாட்டினைக் கொண்டதாகவும் மதரீதியில் வரையறுக்கப்பட்ட சமத்துவமின்மை மற்றும் வரையறுக்கப்பட்ட தீண்டாமை என்ற எண்ணக்கருவுடன் அடையாளம் காணப்படுகின்றது (Silva et.al. 2009). தற்காலத்தில் விவாகத்திலும், சமூகச் செல்வாக்கு அதிகாரத்திலும், சாதி முறையின் தொடர்ச்சியைக் காணலாம். யாழ்ப்பாணத்தில் ஆரம்ப காலங்களில் சாதியே சமூக உறவுகளை நிர்ணயிக்கும் சக்தியாக காணப்பட்டது. யுத்தம் மற்றும் பாரியளவிலான சனத்தொகை இடப்பெயர்வு போன்ற காரணிகளால் கடந்த பல தசாப்தங்களாக யாழ்ப்பாணத்தில் சாதி பல்வேறு மாற்றங்களுக்குள்ளாகி வருகின்ற அதேவேளை மக்களின் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார வாழ்வில் சாதி தொடர்ச்சியான புழக்கத்திலிருந்து வருகின்றது. எனவே யாழ்ப்பாண சாதியில் குறிப்பாக காரைநகர் பிரதேசத்தில் சாதியமைப்பின் நிலை பற்றியும் அதன் மூலம் ஏற்படும்

விளைவுகள் எத்தகையது என்பதை விபரிக்கும் அடிப்படையிலும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2. ஆய்வுப் பிரச்சினை

சமூக அடுக்கமைவினை தீர்மானிக்கின்ற ஒரு முக்கிய சமூகவியல் அலகாக சாதி முறைமை பின்பற்றப்பட்டு வருவதனைக் காணலாம். குறிப்பாக சாதி முறைமையானது இந்த நவீன சமூகத்தில் கூட வலுப்பெற்ற ஒன்றாக தொழிற்பட்டு வருகின்றது. இலங்கையில், தமிழ் மற்றும் சிங்கள சமூகத்தினர் மத்தியில் சாதியானது மிக இறுக்கமாக பின்பற்றப்படும் ஒரு அடுக்கமைவுக் கூறாக காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக, யாழ்ப்பாண தமிழ் சமுதாயத்தினர் மத்தியில் சாதி முறைமை சமூகத்திலிருந்து பிரித்துப் பார்க்க இயலாத அளவுக்கு ஆழமாக மக்களின் அன்றாட சமூக செயற்பாடுகளுடன் இணைந்திருப்பதனை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள காரைநகர் பிரதேசத்திலும் சாதியின் ஆதிக்கம் இன்றும் நிலவுவதுடன், மக்களின் சமூக, பொருளாதார செயற்பாடுகளை நிர்ணயிக்கின்ற ஒன்றாக செயற்பட்டு வருகின்றது. எனினும் சாதி முறைமையினால் சமூகத்தில் பல்வேறு விளைவுகள் இடம்பெறுவதன் காரணமாக அதனை ஒழிப்பதற்காக பல்வேறு சமூக இயக்கங்கள், சங்கங்கள் போன்றன ஒவ்வொரு காலப்பகுதியிலும் தமது செயற்பாடுகளை முன்னெடுத்தன. இத்தகைய அடிப்படையில் சாதி முறைமையை சமூகத்தில் இல்லாது ஒழிப்பதற்காகவும், சாதியினால் ஏற்படும் பிரச்சினைகளை தடுப்பதற்காகவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் காரைநகர் பிரதேசத்தில் சாதி முறையினால் ஏற்படுகின்ற விளைவுகள் ஏன் இன்னும் குறைந்ததாக இல்லை, சாதி முறைமையினால் காரைநகர் மக்கள் எத்தகைய விளைவுகளை எதிர்கொள்கின்றார்கள் போன்ற வினாக்களுக்கு விடை காண்பதாகவே இவ்வாய்வுப் பிரச்சினை வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 3. ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வானது காரைநகர் பிரதேசத்தில் சாதி கட்டமைப்பு முறைமையை அடையாளப்படுத்துவதுடன், சாதி முறை செயற்பாட்டினால் சமூகத்தில் எவ்வகையான விளைவுகள் இடம்பெறுகின்றன என்பதை கண்டறிவதையும் நோக்காகக் கொண்டுள்ளது.

## 4. காரைநகர்: ஆய்வுப் பிரதேசம்

இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள யாழ் மாவட்டமானது 15 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. யாழ்நகருக்கு வடமேற்கே காரைநகர் பிரதேச செயலக பிரிவு அமைந்துள்ளது. இது யாழ்நகரிலிருந்து 22 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள சிறிய தீவாகும். மேற்கு, வடக்கு பக்கங்களில் பாக்குநீரிணையும் கிழக்கு பக்கங்களில் சில காலங்களில் தண்ணீர் வற்றிக் காணப்படுகின்ற பொன்னாலை வற்றுக் கடலும் தெற்குப் பக்கத்தில் அகலம் குறைந்த சிறிது ஆழமான ஊர்காவற்றுறைக் கடலும் இத்தீவை சூழ்ந்து காணப்படுகின்றன. காரைநகரானது 7 கிலோமீற்றர் நீளமும், 4.5 கிலோமீற்றர் அகலமும் கொண்ட 21.74 சதுர கிலோமீற்றர் பரப்பினைக் கொண்ட தீவாகும்.

## 5. ஆய்வு முறையியல்

ஆய்வு நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு இவ்வாய்வுக்கு பண்புசார் ஆய்வு முறை (Qualitative Research Method) மூலம் தகவல்கள் பெறப்படவுள்ளன. வெளிக்கள ஆய்வுத் தரவுகளை பிரதான மூலமாகவும், ஏனைய இரண்டாம் நிலை தரவுகளை துணைச்சாதனமாகவும் கொண்டு பகுப்பாய்வு முறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்ட காரைநகர் செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் 9 கிராம சேவகர் பிரிவிலும் 84 கிராமங்கள் காணப்படுகின்றன. இங்கு தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

காரைநகர் பிரதேசத்தில் சாதிமுறைமை இறுக்கமாகப் பின்பற்றப்படுவதாலும், தற்காலத்திலும் சாதியின் அடிப்படையிலான புறமொதுக்கம் தொடர்கின்றமையினாலும் இது தொடர்பான முதல் நிலைத் தரவுகளை பெற்றுக்கொள்ள நேர்காணல் (Interview) மூலம் 11 பேரிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டுள்ளன. அத்துடன் அவதான (Observation) முறைமையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. பிரதான தகவலாளிகளிடமிருந்து (Key informants) நேர்காணல் முறை மூலம் முக்கிய தகவல்கள் பெறப்பட்டுள்ளன. அதன்படி: கோயில் குருக்கல், ஓய்வு பெற்ற அதிபர், சங்க உறுப்பினர்கள், ஊர் பெரியார், இளைஞர் அமைப்பின் அங்கத்தவர்கள் எனும் அடிப்படையில் தகவல்கள் நேர்காணல் வழிகாட்டி (Interview schedule) மூலம் பெறப்பட்டுள்ளன. ஆய்வானது ஆரம்ப முயற்சி என்பதாலும் குறுகிய காலம், செலவு என்பனவற்றையும் கருத்திற் கொண்டு நோக்க மாதிரி (purposive sampling) அடிப்படையில் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலை தரவுகளானவை ஆய்வுக்கு வலிமை சேர்க்கும் அடிப்படையில் அமைந்துள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தின் சாதியமைப்பு பற்றிய புத்தகங்கள், காரைநகர் பிரதேச புள்ளிவிபரம் இத்துடன் சாதி தொடர்பான கட்டுரைகள், இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்ட ஆய்வறிக்கைகள், வெளியீடுகள் என்பவற்றிலிருந்து தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. இவ்வாறு சேகரிக்கப்பட்டுள்ள தரவுகளில் அதிகமானவை பண்புசார் தகவல்களாக அமைந்துள்ளமையால் மையக்கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு விவரண அடிப்படையின் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, ஆய்வுப் பெறுபேறுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## 6. இலக்கிய மீளாய்வு

Simon Casie Chitty *(1988)* என்பவரால் எழுதப்பட்ட *"The Castes Customs Manners Literature of The Tamils"* எனும் நூலில் தமிழர்களின் தோற்றம் மற்றும் அவர்கள் வாழும் தமிழ்ப் பிரதேசங்கள் இந்தியாவிலும், இலங்கையிலும் எவ்வாறு அமைந்துள்ளது என்பது தொடர்பாகவும் தமிழர்களின் சாதியமைப்பில் காணப்படும் நான்கு வர்ணப்பாகுபாடுகள் மற்றும் அதற்குள் காணப்படும் சாதியின் உப பிரிவுகள் பற்றியும் பிராமணர், வைஸிகர், சத்திரியர், சூத்திரர் ஆகிய நான்கு வர்ணங்களில் காணப்படும் சாதியமைப்பின் ஒழுங்கமைப்பையும் அதனடிப்படையிலான தொழில் முறைமை மற்றும் இந்தியாவில் இந்து சமயத்தவர்களின் வழக்காறு, பழக்கவழக்கங்கள், நடைமுறை தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. Jasmine Rao (2010) என்பவரால் எழுதப்பட்ட *"The Caste System : Effects on Poverty in India, Nepal and Srilanka"* எனும் ஆய்வுக் கட்டுரையில் இந்தியா, நேபாளம், இலங்கை ஆகிய நாடுகள், அங்கு சமூக அடுக்கமைவில் உயர்வாகக் காணப்படும் மூன்று வர்ணங்களையும் அத்தோடு அடிமட்டத்தில் காணப்படும் சூத்திரர் மற்றும் தீண்டத்தகாதோர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தெற்காசிய நாடுகளில் வறுமையினையும் சாதியின் அடிக்கட்டுமானத்தில் உள்ளோரையும் தொடர்புபடுத்தி ஆராய்ந்துள்ளார். இருப்பினும் இவ்வாய்விலே யாழ்ப்பாணச் சாதிமுறைமை பற்றியோ குறிப்பாக காரைநகரில் சாதியின் தாக்கம் பற்றி ஆராயப்படவில்லை.

Pramsothy Thangesh (2008) என்பவரால் எழுதப்பட்ட *" Caste and Social Exclusion of IDPs in Jaffna Society"* எனும் ஆய்வுக் கட்டுரையில் யாழ்ப்பாணச் சாதி முறைமை மற்றும் சாதிமுறைக்கு எதிரான போராட்டங்கள், யுத்த காலத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் சாதித் தடை அமுலாக்கம் பற்றியும், யாழ்ப்பாணத்தில் உள்ள சாதிகள் மற்றும் தொழில்கள் அத்துடன் அங்கு நிலவிய தீண்டாமைக் கொள்கை மற்றும் அதன் அடிப்படையிலான வழக்கங்கள் மற்றும் யுத்த இடப்பெயர்வின் போது சாதி மாற்றம், உள்ளூரில் இடம்பெயர்ந்து வசிக்கும் மக்களும் அவர்கள் சாதியின் அடிப்படையில் எதிர் நோக்கும் சவால்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. மேலும் யாழ்ப்பாணத்தில் மல்லாகத்தில் இருந்து யுத்தத்தினால் இடம்பெயர்ந்து சென்று அகதிமுகாம்களில் வசிக்கும் மக்களின் சாதியின் அடிப்படையிலான பாகுபாடுகள் பற்றி ஆராயப்பட்டதே தவிர இவ்வாய்வில் காரைநகரை மையப்படுத்தி சாதி முறையின் தாக்கம் பற்றி ஆராயப்படவில்லை.

பரமசோதி தங்கேஸ் (2013) என்பவரால் எழுதப்பட்ட *"யாழ்ப்பாணத் தமிழர் கலாச்சாரத்தில் சாதியமும் இனத்துவமும்"* என்ற நூல் யாழ்ப்பாணத்து சாதியமைப்பு பற்றி தெளிவான விளக்கத்தை தருவதாய் அமைந்துள்ளது. இந்நூலில் யாழ்ப்பாணத்தில் காணப்படும் சாதிகள் மற்றும் அதனையொட்டிய மரபுகளுடன் யாழ்ப்பாணத்தில் சாதி தொடர்பான அடையாளங்கள் தற்காலத்தில் அவை மாறும் தன்மை பற்றியும் சாதியடிப்படையிலான தொழில்கள் மற்றும் வழிபாடுகள் சாதிக்குள் காணப்படும் சாதிகள் தொடர்பாகவும் இனங்காணப்பட்டுள்ளது. மேலும் யுத்தத்தின் பின்னரான யாழ்ப்பாண மக்களின் புலம்பெயர்வு, மற்றும் சாதி, உறவுமுறை, வகுப்பு போன்ற சமூக நிறுவனங்களின் வகிபங்கினை பகுப்பாய்வு செய்துள்ளார். யாழ்ப்பாணச் சாதிமுறைமை தொடர்பான ஒரு பரந்த விளக்கத்தைத் தருவதாக இந்நூல் அமைந்திருந்தாலும் காரைநகர் சாதி பற்றி இந்நூலில் ஆராயப்படவில்லை.

வெகுஜனன் மற்றும் இராவனா (2007) என்பவர்களால் எழுதப்பட்ட *"இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்"* எனும் நூலில் 'இலங்கை சாதியமைப்பு' பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. வர்க்கப்பிரிவினைகளின் தோற்றமும் வளர்ச்சியும், பிராமணியத்தில் தோற்றத்துடனான சாதியமைப்பு, நிறுவன வடிவம் பெறுதல் பற்றியும் இலங்கையின் சிங்கள, கிழக்கிலங்கை தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் மலையக மக்களிடையே சாதி முறைமை தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. மேலும் வடபுலத்தில் சாதியத்தின் தாக்கம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளதுடன். யாழ்ப்பாணத்தில் தீண்டாமை பற்றியும் தாழ்த்தப்பட்ட சாதியினை அடக்குமுறைக்கு எதிராக மேற்கொண்ட போராட்டங்கள் தொடர்பாக விரிவாக நோக்கப்படுவதுடன் இன்று வரை சாதி முறைமை யாழ்மக்களிடையே புழக்கத்தில் இருந்து வருகின்றமை பற்றியும் இவ்வாய்வில் விரிவாக ஆராயப்படுகின்றது.

Silva, Kotikabadde and Abeywickrama (2009) ஆகியோர் இணைந்து எழுதிய *'casteless or caste – blind'* எனும் புத்தகத்தில் 'Caste Discrimination in Sinhala society' எனும் ஆய்வுக் கட்டுரையில் சிங்கள சாதி முறைமை எவ்வாறு தோற்றம் பெற்றது, சிங்களச் சமூகத்தில் சாதியின் இயல்புகள், சிங்களச் சாதி முறையின் பிரிவுகள், சாதிமுறையின் அடிப்படையிலான அடுக்கமைவு எவ்வாறு காணப்பட்டுள்ளது என்பது தொடர்பாகவும், சாதியின் அடிப்படையில் அமைந்த தொழில்கள் மற்றும் சிங்கள சமூகத்தில் அந்தஸ்து குறைந்த தொழில்கள் என்பவற்றுடன் இச்சமூகத்தில் ஒதுக்கப்பட்ட சாதியினர் பற்றியும் சிங்கள சமூகத்தில் தீண்டாமை பற்றியும் ஆராய்ந்துள்ளனர். குறிப்பாக வலிவிட்ட சமூகத்தில் மேளம் அடிக்கும் சாதியினைப் பெருந்தொகையாகக் கொண்ட பிரதேசத்தில் அவர்களிடையேயான சாதிப்பாகுபாடு பற்றி ஆராயப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இலங்கையில் தமிழ் சமூகத்தின் சாதி தொடர்பாக இக் கட்டுரையில் ஆராயப்படவில்லை.

*"Casteless or caste – blind"* (2009) எனும் நூலில் Balasundaram, Chandraboss and Sivapragasan ஆகியோர் எழுதிய "Caste discrimination among Indian Tamil Plantation workers in Sri Lanka" எனும் ஆய்வுக்கட்டுரையில் இந்தியச் சாதிமுறைமை அதனோடு தொடர்புபடுத்தி இலங்கையில் தோட்டத் தொழிலாளர்கள் வாழும் பிரதேசங்கள் மற்றும் அவர்களிடையே காணப்படும் சாதியமைப்பு முறைமை, இலங்கையில் இருந்து காலனித்துவத்தின் பின்பு மீண்டும் இந்தியாவிற்கு திருப்பி அனுப்பப்பட்டமை பற்றியும் அத்துடன் தெரிவுசெய்யப்பட்ட தோட்டப்பகுதிகளான செல்லாத் தோட்டம், ஒபதா தோட்டம், டெம்பிள் தோட்டம், டோவ் தோட்டம், மொச்சாத் தோட்டம், ஆகிய தோட்டங்களை மையப்படுத்தி ஒரு இனவியல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

லங்கா செய்திப் பத்திரிகையில் (Lanka News Paper, 2008) வெளிவந்த *"Caste system in Sri Lanka"* எனும் கட்டுரையில் இந்திய சாதி முறைமையினை அடியொட்டி வந்த இலங்கை சாதி முறைமையின் தோற்றம் பற்றியும், சிங்கள சாதி முறைமையின் இரு பெரும் பிரிவுகளான கண்டிய சிங்களவர்கள் மற்றும் கரையோர சிங்களவர்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. மேலும் இலங்கையில் யாழ்ப்பாணச் சாதி முறைமை, மட்டக்களப்புச் சாதி முறைமை மற்றும் அவற்றுடன் தொடர்புபடுத்தி சாதியின் அடிப்படையிலான அடுக்கமைவு பற்றியும், இலங்கைக்கு காலனித்துவத்தின் போது அழைத்துவரப்பட்ட மலையகத் தோட்டத் தொழிலாளர்களிடையே

நிலவும் சாதி முறைமை தொடர்பாகவும் கொழும்பில் செட்டிகள், சமயத்துடன் தொடர்புபடுத்தி சாதி முறைமையின் தூய்மை பற்றியும் இக் கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இலக்கிய மீளாய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட அனைத்து நூல்களும் தெற்காசிய நாடுகள் மற்றும் இலங்கையை மையப்படுத்திய ஆய்வுகளாகவே காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சாதி முறைமையையும் அதன் தாக்கமும் தொடர்பாக யாழ்பாணத்திலுள்ள காரைநகர் பிரதேசத்தை மையப்படுத்திய எவ்வகையான ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே இவ்வாய்வு இடைவெளியை பூர்த்தி செய்யும் வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 7. சாதிமுறைமையும் அதன் விளைவுகளும் - பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

இவ்வாய்வானது காரைநகர் பிரதேசத்தில் அப்பிரதேச மக்களிடையே சாதிமுறைமை சமூகத்தில் எவ்வாறான விளைவுகளை உயர் மற்றும் தாழ் சாதியினரிடையே ஏற்படுத்தியுள்ளது என்பதை கண்டறிந்து அடையாளப்படுத்துகின்றது. நடைமுறையிலுள்ள பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சாதி வெளிப்படையாக பேசப்படாத ஒரு விடயமாக காணப்படுவதால் இவ்வாய்வினை மேற்கொள்ளும் பொருட்டு அவதானம், நேர்காணல் மற்றும் பிரதான தகவலாளிகளிடமிருந்தும் தகவல்கள் பெறப்பட்டன. 11 நபர்களிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டதுடன் கோயில் குருக்கள், பாடசாலை அதிபர், ஊர்ப் பெரியார்கள் மற்றும் சங்கப் பொறுப்பாளர்களிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டன. சாதி முறைமை தொடர்பான தாக்கங்களை கண்டறிய அவதானம் ஒரு சிறந்த முறைமையாக காணப்பட்டதுடன் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஆய்விற்கான பெறுபேறுகள் விபரிப்பு முறையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 7.1. திருமணத்தில் சாதியின் பங்கு

காரைநகர் பிரதேசத்தில் உள்ள மக்கள் இன்றுவரை சாதியின் அடிப்படையில் திருமணம் மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். திருமணத்தின் போது பல்வேறு வழிமுறைகளில் சாதியானது பார்க்கப்படுகின்றது. காதல் திருமணங்களில் சாதி பெரிதாக கவனத்திற் கொள்ளப்படாவிட்டாலும், சாதி வெளிப்படையாகவே பார்க்கப்படும் ஒரு இடமாக பேச்சுத் திருமணம் உள்ளது. உயர் சாதியினர் எனினும் தாழ்சாதி எனினும் ஒவ்வொரு சாதியினரும் தம் சாதிக்குள்ளேயே பேச்சுத் திருமணம் நடாத்திக் கொள்வார்கள். இதனையே சமூகத்தினர்கள் ஏற்றுக்கொள்வதாக காணப்படுகின்றது. இத்தகைய திருமணங்கள் திருமணத் தரகர் மூலமாகவோ அல்லது நெருங்கிய உறவினர்கள் மூலமாகவோ மிகக் கவனமாக பேச்சு வார்த்தைகள் மூலம் நடாத்தப்படுகின்றன.

குறித்த வெள்ளாள சாதியினைச் சேர்ந்தவர்கள் வெள்ளாள சாதியிலேயே திருமணத்தை மேற்கொள்கின்றனர். தாழ்த்தப்பட்ட சாதியினைச் சேர்ந்தவன் உயர் சாதியிலே திருமணத்தை பேணுவதற்கும் விரும்பவில்லை. பொதுவாக இங்கு திருமணத்தில் சாதி மாற்று திருமணங்கள் விரும்பப்படுவதில்லை. அத்தகைய திருமணங்கள் காதல் திருமணங்கள் மூலமும் மற்றும் பண, சொத்து ரீதியான முன்னேற்றங்களுக்காகவும் சாதிமாற்ற திருமணங்கள் இடம்பெறுகின்றன. அத்தகைய திருமணங்களைத் தவிர சாதி மாற்ற திருமணங்கள் எதிர்க்கப்படுகின்ற விடயமாகவே காணப்படுகின்றது. திருமண விடயத்தில் சாதி தொடர்பாக காரைநகர் - பலகாடு வெள்ளாளர் சாதியைச் சேர்ந்த நபரிடம் நேர்காணலின் போது அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> ''சாதி சமூகத்தில் முக்கியமான ஒன்று. திருமண விடயங்களில் மாத்திரமன்றி அனைத்து விடயங்களிலும் என்னைப் பொறுத்தவரை சாதி மிக அவசியமான ஒன்று. நான் பள்ளர் வீட்டில் திருமணம் செய்யவில்லை, என்னுடைய பிள்ளைகளுக்கும் செய்து கொடுக்க விரும்பவில்லை. ஊர் விட்டு ஊர் திருமணம் செய்வதற்கு கூட நான் உடன்படவில்லை. எங்களுடைய உறவுகள் அவ்வாறு செய்தால் சமூகத்திலிருந்து எமது குடும்பத்தை விலக்கி வைத்துவிடுவார்கள். நாம் ஏன் அவர்களுடன் திருமணம் செய்து கொள்ள

> போகின்றோம்?'' (நேர்காணல் 01). என்ற கூற்றினூடாக முற்று முழுதாக சாதிமாற்ற திருமணத்தை எதிர்க்கும் அவரது மனோபாவத்தினைக் காணக்கூடியதாய் அமைந்தது.

நேர்காணலின் போது சாதி தொடர்பாக ஒரு இடைநிலச் சாதியினைச் சேர்ந்த தகவலாளி குறிப்பிடுகையில்

> ''ஆசாரிமார் என்று எம்மை அழைப்பார்கள், தச்சு வேலை பிரதான தொழிலாக காணப்படுகின்றது. சாதியில் நாம் வெள்ளாளர், ஐயர் (பிராமணர்) இவர்களுக்கு அடுத்தபடியாக இருக்கின்றோம். பொதுவாக நாம் எங்களுடைய ஆசாரி சாதிக்குள்ளே திருமணம் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளோம். நாம் வீராட் விஷ்வ பிரம்ம குலத்தைச் சேர்ந்தவர்கள். பொதுவாக ஆசாரி எனும் போது தச்சர், கொல்லர், பத்தர், கண்னார், கச்சியப்பன் என பிரிவு உண்டு. இவர்களுக்குள் திருமணம் செய்யலாம் ஆனால் சாதி மாறி திருமணம் செய்வதை நான் விரும்பவில்லை. என்னுடைய மகள் ஒரு நட்டுவ சாதியனைச் சேர்ந்த ஒருவரைத் தான் திருமணம் செய்திருக்கிறார். காதல் திருமணம் தான் செய்திருக்கிறார் நான்கு வருடம் ஆகிவிட்டது. இன்றுவரை ஒரு தொடர்பும் இல்லை. கதைப்பதில்லை, அவரை நாம் எமது குடும்பத்தில் இருந்து ஒதுக்கி வைத்துவிட்டோம். மீண்டும் சேர்க்க மாட்டோம்'' (நேர்காணல் 02).

என உறுதிபடக் கூறினார். பொதுவாக நோக்கும் போது திருமணத்தின் போது சீதனம், குடும்ப பின்னணி, அந்தஸ்து முதலான பல்வேறு விடயங்கள் சாதியுடன் இணைந்ததாக காரைநகர் பிரதேசத்தில் காணப்படுகின்றது. இங்கு பிராமணர்கள் பிராமணர்களையே திருமணம் செய்துள்ளனர். வேளாளர் சாதியினரில் சிலர் வெவ்வேறு தாழ்தப்பட்ட சாதியினருடன் திருமணம் மேற்கொண்டிருப்பதுடன் பொதுவாக அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு இருப்பது அவதானத்தினூடாக அறிந்துகொள்ளக் கூடியதாய் இருந்தது. பொதுவாக வேளாளர்கள் நிலச்சுவாந்தர்களாக இருப்பதனால் பல்வேறு சொத்துக்களை தம்வசம் வைத்துள்ளனர். தாம் சேர்த்த சொத்துக்கள் தம்முடைய சாதியினரிடம் அன்றி வேறு எவரிடமும் சென்று விடக்கூடாது என்பதாலும் தமது சாதிக்குள்ளேயே திருமணத்தை மேற்கொள்கின்றனர்.

ஏன் சாதிமாற்ற திருமணங்களை மேற்கொள்ள இவ்வூர் மக்கள் பெரிதாக விரும்பவில்லை என்பதை வேளாளர் சாதியைச் சேர்ந்த வியாவில் பாடசாலை அதிபர் அவர்களிடம் வினவிய போது அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

> ''ஒருவரின் சாதியினை அறிந்து தான் அவனிடம் நம் வீட்டு பிள்ளையை (பெண்ணை) கொடுக்க வேண்டும். எங்களுடைய சாதிக்குள்ளயே திருமணம் செய்தால் பிரச்சினைகள் குறைவு. சாதிக்கேற்ற புத்தி என்று சொல்வார்கள் அதன்படி தான் தாழ் சாதியினர் நடந்து கொள்வார்கள். சாதியின் அடிப்படையிலே திருமணம் அமைதல் விரும்பத்தக்கது. முன்னைய காலங்களில் கிட்டத்தட்ட 1991 இற்கு முற்பட்ட காலங்களில் சாதி மாற்ற திருமணம் பாரிய முரண்பாடுகளை இச் சமூகத்தில் விளைவித்தது. யுத்தத்தின் பின் காதல் திருமணங்கள் மூலம் சாதி விட்டுச் சாதி திருமணம் செய்வது சற்று அதிகரித்து விட்டது. இருப்பினும் சாதிவிட்டு திருமணம் செய்தவர்களை இச் சமூகம் ஏற்பதில்லை'' என்றார் (நேர்காணல் 03).

மேற்கூறப்பட்ட நேர்காணலின் ஊடாக காரைநகரில் தற்காலத்திற் கூட சாதி திருமணத்தில் செல்வாக்குச் செலுத்துவதனை அறியக்கூடியதாய் இருக்கின்றது.

காரைநகர் வாழ் மக்கள் சாதி விட்டுச் சாதி திருமணம் செய்வதிலும், ஊர் விட்டு ஊர் திருமணம் செய்வதினையும் விரும்பவில்லை. தாழ்தப்பட்ட சாதியினர் உயர் சாதி ஒருவரை காதலித்தால் கூட இங்கு திருமணம் செய்து வைக்கும் நிலை காணப்படுவதில்லை. வன்மையான சாதி முரண்பாடுகளும், கீழ் சாதி என்று திட்டி தீர்த்தலும், வலுக்கட்டாயமாக பிரித்து வைத்தல், சொத்துக்களை வழங்காமல் தனிமைப்படுத்தல், குறிப்பிட்ட நபரை தமது குடும்ப காரியங்களில் இருந்து ஒதுக்கி வைக்கும் நடவடிக்கையும் காணப்படுகின்றது. இத்தகைய பிரச்சினைகள் ஒருவரைத் தனிமைப்படுத்துவதுடன் தொடர்ச்சியான அவர்களது சந்ததியினைப் பாதிப்பதாகவும்

காணப்படுகின்றது. அவ்வாறு காணப்பட்டாலும் அவையும் சாதி என்னும் விதிமுறையின் கீழ் நசுக்கப்படும் விடயமாக காணப்படுகின்றது. சமூகமானது பல்வேறு நிறுவனங்கள் மூலம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஒழுங்கமைப்புக்கள் சிறப்பாக அமையாது போனால் சமூகப் பிரச்சனைகள் தோன்றும். இத்தகைய நிறுவனங்கள் ஒழுங்கீனத்தை (disorganization) இழப்பதற்கு காரைநகரில் முக்கிய காரணமாக சாதி மாற்ற திருமணங்கள் பங்களிக்கின்றது எனலாம். எனவே இத்தகைய பிரச்சினையால் சமூக ஒழுங்கின்மை தோன்றி சமூகப் பிரச்சினை தோன்ற காரணமாகின்றது. இதனடிப்படையில் சமூக ஒழுங்கமைவின்மை என்ற எண்ணக்கருவுடன் தொடர்புபடும் ஒன்றாக சாதிமாற்ற திருமணங்கள் காணப்படுகின்றன.

ஒரு சமூகத்தில் வன்மையான சம்பவங்களினால் அந்த சமுதாயத்தின் நிலைமை பாதிக்கப்படலாம். குறிப்பாக சாதி மாற்ற திருமணங்களில் இத்தகைய வன்மையான நடைமுறைகள் காணப்படுகின்றது. குறிப்பாக சாதி மாற்ற காதல்களின் போது வன்மையான முறையில் பலாத்கார வேறு திருமணங்கள் இடம்பெறுதல் மற்றும் தற்கொலை முயற்சி போன்ற வன்மையான நடவடிக்கைகள் இடம்பெறுவதனைக் குறிக்கும். இதனால் சமூகத்தில் முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுகின்றன. தொகுத்து நோக்கும் போது சாதி அடிப்படையிலே திருமணம் அமைவதை காரைநகர் மக்கள் விரும்புகின்றனர். சாதி மாறி திருமணம் செய்வதை முற்று முழுதாக எதிர்க்கின்றனர். இளம்பராயம் முதல் உணர்வுகளால் கட்டியெழுப்பப்பட்ட ஒரு விடயமாக சாதியின் அடிப்படையிலான திருமணங்கள் அமைந்துள்ளன. பெரும்பாலும் யுத்தத்தின் பின்னரான இடப்பெயர்வில் இந்நிலையில் சற்று தளர்வு ஏற்பட்டுள்ளதனை அவதானிக்ககூடியதாய் அமைந்துள்ளது. இவ்வாறான நடவடிக்கை கடந்த காலத்தில் சாதிகளுக்கிடையே நிலவிய வேறுபாடுகளைப் பலவீனப்படுத்துவதாக அமைந்துள்ளது.

### 7.2 ஆலயப் பிரவேசத்தில் தடைவிதித்தல்

மத வழிபாட்டுத் தலங்கள் யாவருக்கும் பொதுவான ஒன்றே. இறைவனின் சந்நிதியில் யாவரும் சமமானவர்களே. ஆனால் இதிலும் கூட இன்று வரை மனிதனால் உயர்வு, தாழ்வு போற்றப்படுகின்றது. உயர் சாதியினரால் நிர்மாணிக்கப்பட்ட கோயில்களில் ஆரம்ப காலப்பகுதியில் தாழ்தப்பட்டோருக்கான ஆலயப்பிரவேசம் தடைவிதிக்கப்பட்டிருந்தது. பிற்பட்ட காலங்களில் அதற்கெதிராக அந்நிலை தளர்தப்பட்டிருந்தாலும். இன்றும் கூட அவர்கள் கோவில்களில் முன்னுரிமைப்படுத்தப்படுவதில்லை.

காரைநகரில் சில ஆலயங்களில் பிரவேசித்தல் முற்று முழுதாக தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பள்ளர், முக்கியர் (முக்குவர்), வண்ணார், திமிலர் போன்றோர் ஆலயங்களில் விலக்கி வைக்கப்படுகின்றனர். அவதானத்தின் மூலம் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் நாச்சிமார் கோயில், வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம், திக்கரை முருகன் கோயில், போசுட்டி முருகன் ஆலயம் போன்றவற்றுள் தாழ்தப்பட்டோர் உட்செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆலயப் பிரவேசத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கான கோயில் உட்பிரவேசம் தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள பிரதான தகவலாளியான பாடசாலை அதிபரிடம் வினவிய போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

> “குறிப்பாக தாழ்த்தப்பட்ட சாதியினரை அவர்களின் துப்பரவின்மை காரணமாக கோயிலுக்குள் எடுப்பதில்லை. பொதுவாக ஆலயம் தூய்மை பேணப்பட வேண்டிய இடம். இங்கு தூய்மையின்றி வருவதை நாம் அனுமதிப்பதில்லை. பொதுவாக பள்ளர், முக்குவர் போன்ற தாழ்த்தப்பட்ட சாதியினர் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதால் அவர்கள் துப்பரவில்லாதோராக காணப்படுகின்றனர். மேலும் சில தாழ்த்தப்பட்ட சாதியினர் கள்ளுசீவுதலில் ஈடுபடுவதால் கள்ளு முதலான போதைப் பானங்களைப் பருகி விட்டும் வருவார்கள். கோயில் தூய்மையான இடம். எனவே இங்கு இவர்கள் வருவதை நாம் விரும்புவதில்லை எனத் தனது கருத்தை தெரிவித்தார் (நேர்காணல் 03).

பொதுவாக வேரப்பிட்டி, கல்லந்தாழ்வு, மாதடை, சந்தம்புளியடி, ஊரி, தோப்புக்காடு, பிட்டி ஓலை, தலை ஓலை, நீலங்காடு, ஐயனார் கோவிலடி, சிவகாமியம்மன் கோயிலடி, இலகடி

போன்ற இடத்தில் குறித்த தாழ்த்தப்பட்ட சாதியினர் செறிந்து வாழ்கின்றனர். இவர்கள் மீன்பிடி, கள்ளுச்சீவுதல் (சீவல் தொழில்) போன்ற தொழில்களில் ஈடுபடுவதால் இவர்களை இலகுவில் அடையாளங்கான முடிந்தமை அவதானத்தின் மூலம் பெறப்பட்டதாகும். தாழ்த்தப்பட்டோர் செல்வதற்கு தடை விதிக்கப்பட்ட ஆலயங்களுக்கு பொதுவாக அவர்களாகவே செல்வதை தவிர்த்துக்கொள்கின்றனர். இருப்பினும் காரைநகரில் தாழ்த்தப்பட்ட சாதியினர் உட்செல்ல தடைவிதிக்கப்பட்ட ஆலயங்களுக்குள் இடைநிலைச் சாதியினைச் சேர்ந்த 'நட்டுவர்' எனப்படுபவர்கள் மங்கள வாத்தியங்கள் இசைப்பதற்காக வரவேற்கப்படுகின்றனர். மேலும் 'வண்ணார்' எனப்படும் தாழ்த்தப்பட்ட சாதியினைச் சேர்ந்தவர்கள் வெள்ளைகட்டுதலுக்காக ஆலயத்தினுள் உட்பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

காரைநகரில் கோயில்களுக்குள் தாழ்த்தப்பட்ட சாதியினர் உட்செல்ல முடியாததால் அச்சாதியில் பணபலம் உடையவர்கள் ஒன்று சேர்ந்து தமக்கென ஆலயங்களை கட்டியுள்ளனர். மேலும் உயர் சாதியினருக்கு எதிராக கோயில்களை நிர்மாணித்தும் உள்ளனர். எடுத்துக்காட்டாக காரைநகர் சிவகாமி அம்மன் ஆலயம் மற்றும் கல்லந்தாழ்வு ஆலயம் என்பனவாகும். காரைநகரில் ஈழத்துச் சிதம்பரம் என்று அழைக்கப்படும் இலங்கையில் மிகவும் புகழ்வாய்நத இவ் ஆலயத்தில் சாதிப்பாகுபாடுகள் இன்றி அனைவரும் உட்செல்ல முடியும். இருப்பினும் அங்கு தாழ்த்தப்பட்டோருக்கான வரையறைகளும் நிபந்தனைகளும் காணப்படுகின்றன. சுவாமியை தோளில் சுமந்து வீதி வலம் வருதல் திருவிழாக்கள் மற்றும் ஏனைய சிறப்பு நாட்களில் முக்கிய ஒரு அனுஷ்டானம் ஆகும். இந் நிகழ்வின்போது சுவாமியை தோளில் சுமப்பதற்கு தாழ்த்தப்பட்ட சாதியனைச் சேர்ந்த ஒருவருக்கு இயலாத காரியமாகும். ஏனெனில் வேளாளர்கள் இவ் அதிகாரத்தினை தம்வசம் வைத்துள்ளனர்.

மேலும் திருவிழாக்களை நடாத்துதல் போன்றவற்றில் வெள்ளாளர்கள் முன்னிற்பதுடன் இவ்வாறு முன்நிலை வகிப்பவர்கள் பெரும் தனவந்தர்களாகவும், பெரும்பாலும் வெள்ளாள சாதியினைச் சேர்ந்தவர்களாகவும் காணப்படுவது அவதானத்தினூடாகப் பெறப்பட்டது. இதனடிப்படையில் ஏனைய சாதியினரிடம் கோயில் நடவடிக்கைகளில் ஆதிக்கம் வாய்ந்தவர்களாக வேளாளர்கள் காணப்படுகின்றனர். பொதுவாக திருவிழாக்களை நடாத்துவதற்காக தாழ்த்தப்பட்ட சாதியினரிடம் ஓரிரு திருவிழாக்கள் ஒப்படைக்கப்பட்டிருப்பினும் ஐயர்மார் (பிராமணர்கள்) அவர்களுக்கு 'தெற்பை' போட அனுமதிப்பதில்லை. (இந்துக்கள் ஆலயங்களில் திருவிழா மேற்கொள்ளும் போது தெற்பை கை விரல்களில் அணிவது வழக்கமானது). தெற்பையை சுவாமி சிலையில் அணிவித்தே திருவிழாக்களைச் செய்கின்றனர். ஆனால் வேளாளர் சாதியினைச் சேர்ந்தவர்கள் தாம் தமது விரல்களில் தெற்பையை அணிந்து திருவிழாக்களை நடாத்துகின்றனர்.

ஆலய வழிபாட்டில் இந்துக்கள் இறைவனைப் பூஜிக்கும் வழிகளில் மிகப்பிரதானமான ஒன்று தேவாரம் பாடுதல் ஆகும். திருவிழாவின் போது தேவாரங்கள் பாடுவதற்கு தாழ்த்தப்பட்ட சாதியினரை அனுமதிப்பதில்லை. மேலும் கோயில்களில் உற்சவ காலங்களில் அன்னதானம் இடுதல் முக்கிய ஒரு நிகழ்வாகும். இவ் அன்னதான உணவை உட்கொள்ள அனைவரும் பங்குபற்றுவர். இதன் போது பொதுவாக உயர்சாதியினர் அமரும் பந்திகளில் அல்லது அருகாமையில் தாழ்தப்பட்ட சாதியினர் உணவருந்துதல் இங்கு விரும்பத்தக்கதன்று. சில சமயங்களில் அவர்கள் தாமாகவே ஒதுங்கிக்கொள்வர். இவ்வாறு இன்னோரன்ன வழிகளில் ஆலய உற்பிரவேசம் மற்றும் ஏனைய ஆலய செயற்பாடுகளில் உயர்சாதியினரால் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு பாரபட்சங்கள் நிலவுகின்றன.

### 7.3 தண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் தடை

மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் நீர் மிக முக்கியமான ஒன்றாகும். இதனடிப்படையில் காரைநகரில் நிலக்கீழ் நீரானது பாரியதொரு வளமாக உள்ளது. பொதுவாக ஒவ்வொரு வீடுகளும் தமக்கான சொந்தக் கிணறுகளைக் கொண்டிருக்கின்றன. இங்கு உயர் சாதியினரால் நிர்மாணிக்கப்பட்ட கிணறுகளில் இருந்து தண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பல இடர்பாடுகளை எதிர்கொள்ளகின்றனர். உயர் சாதியினரால் நிர்மாணிக்கப்படும் கிணறுகளை வெட்டுவதற்கும், சுத்தப்படுத்தி இறைப்பதற்கும் தாழ்த்தப்பட்ட சாதியினரே தமது உழைப்பினை வழங்குகின்றனர்.

அதன் பிற்பட்ட காலங்களில் நீரினை அவர்கள் பெற்றுக்கொள்வதற்கு உயர் சாதியினர் அனுமதிப்பதில்லை.

காரைநகர் நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும். இங்கு கரையோரத்தை அண்டிய பிரதேசங்களில் பொதுவாக மீன்பிடித்தொழில் மேற்கொள்ளப்படுவதால். தாழ்த்தப்பட்ட சாதியினரே கரையோரங்களை அண்டிய பிரதேசங்களில் நிறைந்து வாழ்கின்றனர். கடலுக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள கிணறுகள் பொதுவாக உவர்நீராக காணப்படுவதால் குடி நீரைப் பெற்றுக்கொள்ள ஏனைய மத்திய பகுதிகளில் வாழும் உயர் சாதியினரின் கிணறுகளையே நாட வேண்டி ஏற்பட்டுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெரும்பாலான உயர்சாதியினர் நீரை வழங்க மறுக்கும் நிலை காணப்படுவதுடன் அவ்வாறு நீரை வழங்குவதாயினும் உயர் சாதியினர் தாமாகவே நீரை அவர்களின் பாத்திரங்களில் அள்ளி ஊற்றும் நிலை காணப்படுகின்றது. ஏனெனில் தாழ்த்தப்பட்ட சாதியினர் கைகள் அந்தக் கிணறுகளில் பட்டால் முழு நீரும் அசுத்தமாகிவிடும் என்ற மனப்பான்மையை அவதானிக்க கூடியதாய் இருந்தது.

இத்தகைய பாகுபாட்டின் விளைவாக அவர்களின் எண்ணப்பாங்கை அறியும்பொருட்டு தாழ்த்தப்பட்ட வண்ணார் சாதியினைச் சேர்ந்த நபரிடம் நேர்காணலின் போது பின்வருமாறு கூறினார்.

> ‘‘எம்மை துப்பரவில்லாதவர்களாக கருதுகின்றார்கள். ஆனால் எனது வீட்டைச் சுற்றிப்பாருங்கள் நாம் துப்பரவாக தான் இருக்கின்றோம். வெள்ளாளர் சாதியில் அனைவரும் துப்பரவானவர்கள் கிடையாது. சிலரின் வீடுகளில் நாம் தான் தண்ணீர் குடிக்க தயங்குவோம். மேலும் முன்னைய காலங்களில் தண்ணீர் பெறுவது பெரும் சிரமம். அந்தளவு சாதி வேற்றுமை இங்கு காணப்பட்டது. தற்போது பணம் படைத்தவர்கள் பெருகிவிட்டார்கள். அதனால் வெள்ளாளரின் காணிகளை பன்மடங்கு பணம் கொடுத்து வாங்குகின்றனர். இதனடிப்படையில் தாழ்தப்பட்டோர் அனைவரும் சேர்ந்து எமக்கென பொதுவான கிணறு வைத்துள்ளோம். 1990 காலப்பகுதியில் எனது மகன் வியாவிலில் உள்ள உயர்சாதியினர் பாவிக்கும் கிணற்றில் தண்ணீர் அள்ளியதற்காக வெள்ளாளர் அனைவரும் சேர்ந்து காவோலை, மண்ணெண்ணெய் மற்றும் பெற்றோல் ஆகியவற்றை ஊற்றி அந்தக் கிணற்றையே மூடிவிட்டார்கள். அதற்கு என் மகன் அவனது கையினை கத்தியால் காயப்படுத்தி ‘அனைவருக்கும் உடலில் ஓடுவது சிவப்பு இரத்தம் தான் இதில் ஏதும் வேறுபாடு உண்டோ?’ என அவர்களிடம் வினவினான்’’ (நேர்காணல் 04).

இவ்வாறாக அவர் தனது வாழ்வின் சாதியின் அடிப்படையில் நீரினைப் பெற்றுக்கொள்வதில் புறந்தள்ளப்பட்டமை பற்றி விபரிக்கும் போது முற்று முழுதாக சாதியினை வெறுக்கும் மனோபாவத்தினை தகவலாளியிடம் இருந்து அறியக்கூடியதாய் இருந்தது.

### 7.4 தொழிலின் அடிப்படையில் பாகுபாடு

வேலைப்பிரிவினையே சாதி முறைமைக்கு வித்திட்டது எனலாம். காரைநகரில் சாதியின் அடிப்படையிலேயே அவர்கள் செய்யும் தொழிலும் அமையப்பெற்றுள்ளது எனலாம். குறித்த சாதியினர் பரம்பரை பரம்பரையாக மரபு வழக்கப்படி தம் சாதிக்குரிய தொழிலையே மேற்கொள்கின்றனர். இதில் உயர் நிலைச் சாதியினர் தாம் செய்யும் தொழிலை மேன்மையுடையதாகவும், இடைநிலைச் சாதியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட சாதியினரின் தொழிலை இழிவானதாகவும் பார்ப்பதுண்டு. உயர் சாதியினர் பொதுவாக கமத் தொழில் செய்வார்கள். பள்ளர், முக்கியர் போன்ற தாழ்த்தப்பட்ட சாதியினர் கூலி வேலைக்காக வெள்ளாளரின் வயல்களில் வேலை செய்கின்றனர். ஏனையோர் தத்தமது சாதிக்கேற்ப தொழில்களை மேற்கொள்கின்றனர். மேலும் அரசாங்க தொழில்களில் சாதி வேறுபாடற்ற தன்மையை அவதானிக்க கூடியதாய் அமைந்திருந்தது. நேர்காணலின் போது தொழிலின் அடிப்படையில்

தாழ்த்தப்படுவதை பிரதான தகவலாளியான (ஊர்ப்பெரியார்) வெள்ளாளர் சாதியினைச் சேர்ந்த நபர் பின்வருமாறு கருத்து தெரிவித்தார்.

> "அக் காலப்பகுதியில் பள்ளன், வண்ணான் எல்லோரும் எம்மைக் கண்டால் தோளில் இருக்கும் சால்வையை கழற்றிவிட்டு தான் கதைப்பார்கள். தற்போது அந் நடைமுறை வழக்கில் இல்லை. நாம் வெள்ளாளர் என்பதில் எமக்கு பெருமையும் அந்தஸ்தும் உண்டு. அவர்கள் தொழில்களை வெள்ளாளர்கள் இழிவாகப் பார்ப்பதுண்டு அதனால் நாம் அவர்களை தொழிலின் அடிப்படையிலேயே பள்ளன், முக்கியன், அம்பட்டன், வண்ணான் என செய்யும் தொழிலை அடிப்படையாகக் கொண்டு அழைப்பதுண்டு. முற்பட்ட காலங்களில் வெள்ளாளர்கள் பெரிதாக அவர்களுடன் கதைப்பதில்லை ஆனால் இக்காலகட்டத்தில் நாகரீகமற்று அவர்களுடன் சகஜமாக கதைக்கின்றனர். இது எனக்கு பிடிப்பதில்லை" (நேர்காணல் 05).

இவ்வாறான கூற்றின் ஊடாக சாதியை முற்று முழுதாக ஆதரிக்கும் மனோபாவத்தினை அறியக்கூடியதாய் அமைந்திருந்தது. ஒருவன் செய்யும் தொழில் அவனின் வாழ்விற்கு இன்றியமையாத ஒன்றாகும். தொழில்களின் அடிப்படையில் 'பள்ளன்', 'பறையன்' என அழைப்பதால் அவன் சமூகத்தில் முத்திரையிடப்படுகின்றான். உயர் முத்திரையிடல், தாழ்வாக முத்திரையிடல் இவையிரண்டின் அடிப்படையில் நோக்கும்போது தாழ்த்தப்பட்ட சாதியினர் தாழ்வாக முத்திரையிடப்படுகின்றனர். எதிர்மறையாக முத்திரையிடப்படுபவர்கள் குறைவான 'சுயம்' கொண்டவர்களாக சமூகத்தில் காணப்படுகின்றனர்.

பின்வரும் அடிப்படையில் சாதித் தொழிலுக்குரிய பெயர்கள் வார்த்தைப் பிரயோகங்களால் குறித்த சாதியினைச் சேர்ந்தவரை சுட்டிக்காட்டுவதற்கு பிரயோகிக்கப்படுகின்றன. இதனை பின்வருமாறு அட்டவணை 7.4.1 இல் காணலாம்.

**அட்டவணை 7.4.1: சாதியின் அடிப்படையில் நடைமுறையில் குறித்த சாதியினைச் சேர்ந்த நபரை அழைக்கப் பயன்படும் பெயர்கள்**

| **சாதிகள்** | **சுட்டிக்காட்ட பயன்படும் பெயர்கள்** |
|---|---|
| பிராமணர் | பிராமணன் |
| வெள்ளாளர் | வெள்ளாளன் |
| பள்ளர் | பள்ளன் |
| பறையர் | பறையன் |
| கோவியர் | கோவியர் |
| தச்சர் | தச்சன் |
| முக்குவர் | முக்கியர் |
| அம்பட்டர் | அம்பட்டன் |
| வண்ணார் | வண்ணான் |
| திமிலர் | திமிலர் |
| நட்டுவர் | நட்டுவர் |
| கொல்லர் | கொல்லன் |

மூலம்: கள ஆய்வு, ஜனவரி - 2016

சமூகத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினைச் சேர்ந்தவன் தான் செய்யும் தொழிலால் சமூகத்தில் இருந்து அந்நியமயமாக்கப்படுகின்றான். அவன் செய்யும் தொழிலே அவனுக்கு சமூகத்தில் அந்தஸ்து குறைவையும், மனச்சுமையையும் ஏற்படுத்துகின்றது. நேர்காணலின்போது பாடசாலை மாணவியொருவர் சாதி தொடர்பான தனது மனநிலையை பின்வருமாறு விளக்கினார்.

> "எம்மை உயர் சாதியினர் பள்ளர், பள்ளி என அழைப்பார்கள். குறிப்பாக இவர்கள் நாம் செய்யும் மீன்பிடித்தொழிலை மிக குறைத்தே மதிப்பிடுவார்கள். மீன் சந்தையில் கூட

> *சிலர் வந்து மீன்களை வாங்கமாட்டார்கள். எனது தந்தை வீடுவீடாகச் சென்று தான் மீன் விற்பார்'' (நேர்காணல் 06).*

இவ்வாறாக விளக்கும் போது சாதி பற்றி வெளிப்படையாக பேசுவதற்கு பயந்த சுபாவம் கொண்டவராகவும், சாதிமுறைமை இந்தச் சமூகத்தில் தேவையற்ற ஒன்று என்ற எண்ணம் கொண்டவராகவும் காணப்பட்டார்.

### 7.5 நில விற்பனையில் பாகுபாடு

காரைநகர் மக்களின் அந்தஸ்தினை தீர்மானிக்கும் காரணிகளில் நிலம் (காணி) மிக முக்கியமான ஒன்றாகும். இதனடிப்படையில் பெரும் நிலப்பரப்புக்களுக்குச் சொந்தக்காரர்களாக வெள்ளாளர்கள் காணப்படுவதோடு. பெரும் வளமான காணிகள் குறிப்பாக நன்னீர் கொண்ட நிலங்கள் வெள்ளாளர்களிடமே காணப்படுகின்றன. இவ்வாறான நிலங்களைப் பெறுவதற்கு தாழ்த்தப்பட்ட சாதியினர் சில தடைகளுக்கும் பாரபட்சத்திற்கும் உள்ளாகின்றனர். பெரும்பாலும் உயர்சாதியினர் தமது நிலங்களை தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு விற்பதற்கு விரும்புவதில்லை. ஏனெனில் தாழ்த்தப்பட்டோருடன் அருகில் வாழ விரும்புவதில்லை. அது மாத்திரமன்றி ஒரு வெள்ளாளரின் நிலத்தை ஏனைய தாழ்த்தப்பட்ட அல்லது இடைநிலைச் சாதியினருக்கு விற்பதற்கு குறித்த வெள்ளாளரின் உறவினர்களும் விரும்புவதில்லை. இதனால் நிலங்களைப் பெற்றுக்கொள்வதில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். உயர் சாதியினர் விற்பதற்கு விரும்பாத நிலையும் அதே நேரம் ஏனைய சாதியினர் உயர்சாதியினரின் நிலங்களை வாங்குவதற்கும் பெரிதாக விரும்பவில்லை என்பது நேர்காணல்கள் மூலம் அறியப்பட்டது.

### 7.6 கலாச்சார விடயங்களில் புறமொதுக்கம்

காரைநகர் வாழ் மக்கள் தமது கலாசார விழுமியங்களையும், பண்பாட்டு அம்சங்களையும் செவ்வனே பேணிப் பாதுகாக்கும் மரபுடையவர்கள். இதனடிப்படையில் சம்பிரதாய விதிமுறைகளுக்கேற்ற வகையில் அவற்றைக் கடைபிடிக்கின்றனர். திருமணம், பூப்புனித நீராட்டு விழாக்கள், மரணச்சடங்கு போன்றவற்றில் உயர்நிலைச் சாதியினர் ஏனைய சாதியினருடன் தம்உறவினைப் பேண மறுக்கின்றனர். திருமணம் மற்றும் பூப்புனித நீராட்டு விழா, பண்டிகைகள் போன்ற முக்கிய நிகழ்வுகளை அயலவர்கள், உறவினர்கள் சூழ தமது சடங்குகளை நிறைவேற்றுவதுண்டு. இதன்போது அவர்களுக்குத் தெரிந்த ஏனைய சாதியினரை உயர்நிலைச் சாதியினரான வெள்ளாளர்கள் மற்றும் பிராமணர்கள் அழைப்பதில்லை. அவர்கள் அழைத்தாலும் உயர்சாதியினர் செல்வது மிக அரிதே.

கலாச்சார விடயங்களில் தாழ்தப்பட்டட சாதியினரின் புறமொதுக்கம் தொடர்பாக வெள்ளாளர் சாதியினைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவி ஒருவரை நேர்கண்டபோது பின்வருமாறு குறிப்பிட்டார்.

> *''சாதி என்பது நம் முன்னோர்களால் வகுக்கப்பட்ட ஒன்றாகும். சமூகத்தில் சாதி என்பது அவசியமான ஒன்றாகும். என்னுடன் பாடசாலையிலும், பல்கலைக்கழகத்திலும் தாழ்தப்பட்ட சாதி மாணவர்கள் ஒன்றாகப் பயின்றனர். அவர்களுடன் பெரிதாக உறவினைப்பேண நான் விரும்புவதில்லை. அவர்களின் வீடுகளில் இடம்பெறும் வைபவங்களுக்கு என்னை அழைப்பார்கள். நான் செல்ல விரும்புவதில்லை. ஓரிரு வைபவங்களுக்கு சென்றுள்ளேன். அங்கு எமக்கென வேறாக உபசரிப்பதற்கு ஒரு இடம் ஒதுக்கியிருந்தார்கள். அவர்களின் வீட்டில் சமைத்த உணவை நாம் சாப்பிட மறுப்போம் என அவர்களாகவே தெரிந்துகொண்டு எமக்கு பிஸ்கட் போன்ற உலர் உணவுப்பொருட்களை வழங்கினர். மேலும் நாம் தண்ணீர் குடிக்கமாட்டோம் என தெரிந்து குளிர்பானங்கள் (சோடா) போன்றவற்றை குடிப்பதற்கு தந்தனர். அவர்கள் தாங்களாகவே எம்மைப்பற்றி உணர்ந்து நடந்துகொள்வார்கள். ஆனால் வெள்ளாளரோ பிராமணரோ ஏனைய சாதியினரை தமது வீட்டு வைபவங்களுக்கு அழைக்க விரும்புவதில்லை.*

> இருப்பினும் சாதியில் குறைந்தோரை முற்றுமுழுதாக புறக்கணிப்பது ஏற்புடையதல்ல'' (நேர்காணல் 07).

என அவர் குறிப்பிடுகையில் சாதி என்பது இவ் இளம் சந்ததியினர் வரை மிக இறுக்கமாக பின்பற்றப்படுகின்றமை புலனாகின்றது. மேலும் உயர்சாதியினரின் வீடுகளில் இடம்பெறும் வைபவங்களில் தாழ்த்தப்பட்டோர் வரவேற்கப்படுவதில்லை. மாறாக இவ்வாறாக கலாசார விடயங்களில் புறந்தள்ளப்படுகின்றனர்.

நேர்காணலின்போது தோப்புக்காட்டைச் சேர்ந்த தகவலாளியிடம் உயர்சாதியினருடனான தொடர்பு திருமணம் மற்றும் ஏனைய கலாச்சார வைபவங்களில் எவ்வாறான நடைமுறை இங்குள்ளது? என வினவியபோது பின்வருமாறு பதிலளித்தார்.

> ''பொதுவாக நாம் அவர்களிடம் செல்வதுமில்லை அவர்கள் எம்மிடம் வருவதும் இல்லை. நாம் நாமாக அவர்கள் அவர்களாக இருக்கின்றார்கள். நாம் உயர்சாதியினருடன் கதைப்பதுண்டு ஆனால் வீடுகளுக்குள் போய்வரும் அளவு பழகுவதில்லை. 'இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்'' என்றார் (நேர்காணல் 08).

இக்கூற்றினூடாக அவர் விளக்கியதாவது எவன் ஒருவன் மற்றவனுக்கு உதவிசெய்து அவனுடன் பழகுகின்றானோ அவனே சாதியில் உயர்குலத்தவன் என்பதை ஆணித்தரமாக தனது விளக்கத்தை முன்வைத்தார்.

இந்துத் தமிழர்களின் கலாச்சார நடைமுறைகளில் மிகப்பிரதானமான ஒரு விடயமாக மரணச்சடங்கு காணப்படுகின்றது. ஏழை, பணக்காரன், உயர்வானவன், தாழ்ந்தவன் என பாகுபாடின்றி இயற்கையாகவே அனைவரையும் மரணம் விட்டுவைப்பதில்லை. காரைநகரில் இவ்வாறான மரணச்சடங்குகளில் கூட சாதிப்பாகுபாடு தொடர்கின்றது. நேர்காணலின் போது மரணச் சடங்குகள் மற்றும் அதனடிப்படையிலான பாகுபாடுகள் தொடர்பாக பிரதான தகவலாளியான வெள்ளாளர் சாதியனைச் சேர்ந்தவரை வினவிய போது பின்வருமாறு கருத்து தெரிவித்தார்.

> ''1990 க்கு முற்பட்ட காலங்களில் தாழ்த்தப்பட் சாதியினர் மரணச்சடங்குகளிற்கு வந்தால் அவர்களை உள்ளே அனுமதிப்பதில்லை. அவ்வாறு அவர்கள் வந்தாலும் சில சமயங்களில் பிரேதங்களை (மரணித்தவரின் உடலை) பார்க்க அனுமதிப்பதில்லை. பெண்கள் ஒன்றாக கூடி ஒப்பாரி வைப்பது வழக்கம். இதன்போது எமது சாதியினருடன் மாத்திரம் சேர்ந்து ஒப்பாரி வைப்பது வழக்கம். ஏனையோர் வீட்டுக்கு வெளியில் நின்று ஒன்றுகூடி தாமாக சேர்ந்து அழுவார்கள். ஆரம்ப காலங்களில் வெள்ளாளர்களின் காலைப்பிடித்து அழும் வழக்கம் இருந்தது'' என்றார் (நேர்காணல் 09).

இவ்வாறாக அவர் குறிப்பிடும் போது மரணச் சடங்குகளிலும் சாதி வேற்றுமை வேரூன்றியுள்ளமை தெளிவாகின்றது.

மரணச்சடங்குகளில் கிரியைகளை நிறைவேற்றிய பின்னர் சுடலைக்கு பறைமேளம் முழங்க கொண்டு சென்று எரிப்பது இந்துத் தமிழர்களின் பண்பாடாகும் அதனடிப்படையில் காரைநகரில் சுடலையிலும் எரிக்கும் இடத்தில்கூட சாதிப்பாகுபாடு இருக்கின்றமை வியக்கத்தக்க விடயமே. 'தில்லைமயானம்' எனும் மயானத்தில் உயர்சாதியினருக்கு ஒருபகுதி வேறாகவும் ஏனையோருக்கு தனியாகவும் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளமை அவதானத்தின் மூலம் பெறப்பட்டது. காரைநகரில் உள்ள ஏனைய நீலங்காடு மற்றும் சாம்பலோடை ஆகிய மயானங்களில் அவ்வாறான பாகுபாடுகள் காணப்படுவதில்லை. இருப்பினும் இறந்த பின் 'அந்தரட்டை' எனும் திதி கொடுத்தல் எனும் சடங்கினை நிறைவேற்றுவதற்கு அங்கு காணப்படும் மடங்களில்தடை விதிக்கப்பட்டுள்ளது. (அந்தரட்டை என்பது இறந்தோருக்கான பிதிர் கடன் நிறைவேற்றும் சடங்கு). இவ்வாறாக பல்வேறுபட்ட கலாச்சார விடயங்களில் உயர்சாதியினரால் தாழ்தப்பட்டோர் சமூகத்தில் இருந்து புறந்தள்ளப்படுகின்றனர்.

### 7.7 பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளில் பாகுபாடு

பாடசாலைக் கல்விநடவடிக்கைகளில் ஆசிரியர்களால் சாதியின் அடிப்படையில் பாரபட்சங்கள் நிகழாவிட்டாலும் மாணவர்கள் ஒரு சில காரணங்களால் கல்வி நடவடிக்கைகளில் தாழ்தப்பட்டோரிடத்திலிருந்து விலகும் தன்மையை காரைநகர் பிரதேசத்தில் காணமுடிகின்றது. கல்வி நடவடிக்கைகளில் அவ்வாறான பாரபட்சங்கள் தொடர்பாக பாடசாலை அதிபரிடம் வினவியபோது பின்வருமாறு குறிப்பிட்டார்.

> "வியாவில் சைவப் பாடசாலையில் ஆரம்பகாலங்களில் நூற்றுக்கு நூறு வீதமானவர்கள் வெள்ளாளர் சாதியினைச் சேர்ந்தவர்களே 1980 காலப்பகுதியில் ஏனைய சாதியினரின் வருகையும் காணப்பட்டது. தற்போது நூற்றுக்கு நூறு வீதமானவர்கள் இங்கு தாழ்த்தப்பட்டவர்களே. இலங்கை அரசினால் தற்போதைய காலங்களில் மதிய உணவு பாடசாலை அவசியம் வழங்கும் கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆரம்பகாலங்களில் உயர்சாதியின மாணவர்களின் பெற்றோர் சமைத்துத்தரும் உணவுகளை தாழ்த்தப்பட்டோரும் உட்கொண்டனர். ஆனால் சென்றவருடம் நான்கு பிள்ளைகள் வெள்ளாள சாதியினைச் சேர்ந்தவர்கள் கல்வி கற்றனர். மதிய உணவுத்திட்டம் சமைத்துக்கொடுப்பது தாழ்தப்பட்ட சாதியினராகையால் இருந்த நான்கு மாணவர்களும் பாடசாலையை விட்டு விலகிச் சென்றுவிட்டனர். ஆனால் காரைநகரில் ஏனைய பாடசாலைகளில் தாழ்தப்பட்ட சாதியினருடன் வெள்ளாளர்களும் சேர்ந்து கல்விகற்கின்றனர் இங்கு மட்டுமே இவ்வாறனானதொரு நிலைமை காணப்படுகின்றது" என விளக்கினார் (நேர்காணல் 03).

அவதானத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நோக்கும் போது பாடசாலைக் கல்வியில் காரைநகரில் குறித்த ஒரு பாடசாலையில் மட்டும் சாதியின் அடிப்படையிலான பாகுபாடு நிலவியமை கண்டறிப்பட்டது.

### 7.8 நாளாந்த செயற்பாடுகளில் புறமொதுக்கம்

நாளாந்த செயற்பாடுகளின் போது அயல்வீடுகளுக்குச் செல்லல் அவர்களுடன் உறவினைப்பேணுதல், உணவுகளைப் பரிமாறல் என்பன சமூகத்தில் இயல்பானதொன்றே. இதனடிப்படையில் உயர்சாதியினரின் வீடுகளில் தாழ்த்தப்பட்டசாதியினர் வரவேற்கப்படுவதில்லை என்பதுடன் தாழ்த்தப்பட்ட சாதியினரின் வீடுகளுக்கு சென்று உயர்சாதியினர் உறவுகளைப் பேண விரும்பவில்லை என்பதும் அவதானத்தின் மூலம் அறியப்பட்டது. இவ்வாறான விடயங்களை அறியும் பொருட்டு ஊர்ப்பெரியார், வெள்ளாள சாதியினைச் சேர்ந்த நபரிடம் வினவிய போது பின்வருமாறு பதிலளித்தார்.

> "நாம் அவர்களின் வீடுகளுக்குச் செல்வதில்லை. சில சமயங்களில் அவர்கள் எமது வீட்டு காணிகளை துப்பரவு செய்ய கூலிக்கு அழைப்பதுண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் வீட்டுக்கு வெளியில் தான் அமர்வார்கள். இருக்கைகள் வழங்கப்படுவதில்லை. அவர்களுக்கென தனியாக உணவு வழங்க தட்டுக்களும், தண்ணீர் குவளைகளும் காணப்படுகின்றன. அவற்றில் தான் உணவு மற்றும் தண்ணீரை வழங்குவோம். இவர்களுடன் உறவினைப் பேணினால் நம்மை மதிக்கமாட்டார்கள்" (நேர்காணல் 10).

இவ்வாறாக வீட்டுக்குள் தாம் தாழ்ந்தோரை அனுமதிப்பதில்லை என விளக்கியதன் மூலம் முற்று முழுதாக தாழ்த்தப்பட்டோருடன் உறவினைப் பேணுவதற்கு விரும்பாத அவரின் மனோபாவத்தினை அறியமுடிந்தது. மேலும் உயர்சாதியினருடன் பேணும் தொடர்பு நாளாந்த நடவடிக்கைகளில் எத்தகையது என்பது தொடர்பாக பள்ளர் சாதியினைச் சேர்ந்த வியாவில் கடற்றொழிலாளர் சங்கத்தலைவரை நேர்கண்டபோது அவர் பின்வருமாறு கருத்து தெரிவித்தார்.

> "தற்காலத்திலாவது மனிதராக மதிக்கின்றார்கள். ஆரம்ப காலத்தில் 'பிளாக் ஓலை' என அழைக்கப்படும் முற்றுமுழுதாக ஓலையால் செய்யப்பட்டது அதில் தான் தண்ணீரோ


> அல்லது தேநீரினைத் தருவார்கள். இப்பொழுது அந்நிலை மாறி எமக்கென தட்டுக்கள், தேநீர்க் கோப்பைகள் தனியாக வைத்துள்ளனர். மேலும் உயர்சாதியினர் எம்மை மரியாதைக் குறைவாக - வா, போ என்று தான் பேசுவார்கள்" (நேர்காணல் 11).

இவ்வாறு குறிப்பிடும் போது அவர் சாதியின் அடிப்படையில் புறக்கணிப்பிற்கு உள்ளாவதை தாங்க முடியாத மனோநிலை உடையவராக காணப்பட்டார். அவதானத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பிராமணர்கள் வெள்ளாளரின் வீடுகளில் நீர் அருந்துவதோ உணவு உட்கொள்வதோ கிடையாது மாறாக வெள்ளாளர்கள் பிராமணர்கள் வீட்டில் தண்ணீர் அருந்துகின்றனர். சாதியின் அடிப்படையில் காரைநகரில் இருக்கும் உயர்சாதியாக கருதப்படும் பிராமணர்கள் மற்றும் வெள்ளாளர்களின் இம் முரண்பட்ட நிலையினை ஆராய்ந்தபோது வெள்ளாளர்கள் மாமிசம் உண்ணும் காரணத்தினாலேயே பிராமணர்கள் அவ்வாறு நீர் மற்றும் உணவுகளை உட்கொள்வதில்லை என்பது அறியப்பட்டது.

### 7.9 சமூக அந்தஸ்தை வழங்குவதில் சாதியின் பங்கு

சமூக அந்தஸ்தை தீர்மானிப்பதில் சாதியின் பங்கு அளப்பெரியதாகும். அந்தவகையில் சாதி உயர்நிலைச் சாதியினருக்கு உயர் அந்தஸ்தை சமூகத்தில் வழங்குவதனூடாக ஏனையோர் இயல்பாகவே தாழ்நிலைக்கு இட்டுச்செல்லப்படுகின்றனர். காரைநகரின் சாதி முறைமையை நோக்கும் போது இங்கு ஒரு அடுக்கமைவு காணப்படுகின்றது. அதனடிப்படையிலேயே சமூகத்தில் அந்தஸ்தும் வழங்கப்படுகின்றது. பின்வரும் வரைபடம் மூலம் காரைநகரில் சாதியடிப்படையிலான அடுக்கமைவை புரிந்துகொள்ளலாம

**வரைபடம் 7.9.1: காரைநகரில் சாதியின் அடிப்படையிலான அடுக்கமைவு**




*மூலம்: கள ஆய்வு, ஜனவரி - 2016*

மேற்காணப்படும் வரைபடத்தினூடாக நோக்கும் போது காரைநகரில் சாதியின் அடிப்படையில் மிகவும் உயர் அந்தஸ்தில் இருப்பவர்கள் வெள்ளாளர்களாக அதற்கடுத்த நிலையில் பிராமணர்கள் இருக்கின்றனர். இடைநிலைச் சாதியினராக கோவியர், தச்சர், கொல்லர், நட்டுவர் ஆகியோர் காணப்படுகின்றனர். சமூகத்தில் அடிக்கட்டுமான அந்தஸ்தில் இருப்பவர்கள் முக்கியர், வண்ணார், அம்பட்டர், திமிலர், பறையர், பள்ளர் ஆவர். இங்கு உரிமை, செல்வம், கௌரவம், அதிகாரம் என்பன சாதியின் அடிப்படையிலான அந்தஸ்தினை தீர்மானிக்கின்றது எனலாம். வெள்ளாளர்கள் மற்றும் பிராமணர்கள் தமது உயர் அந்தஸ்து தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் சபையில் மரியாதை, சமூகத்தில் மரியாதை, எதிலும் முன்னுரிமை இவையனைத்தும் சாதியின் அடிப்படையில் உயர் நிலையில் இருப்பதால் அவர்களுக்கு கிடைக்கப்பெறுகின்றன.

தொகுத்து நோக்கின் காரைநகர் பிரதேசத்தில் சாதியின் அடிப்படையிலான தாக்கங்கள் உயர் மற்றும் தாழ்தப்பட்ட சாதியினரிடத்தே பின்வருமாறு அமைந்துள்ளது. தாழ்த்தப்பட்ட சாதியினர் பின்வரும் வழிகளில் உயர் சாதியினரால் பாகுபாட்டிற்கும், புறந்தள்ளுகைக்கும் உட்படுகின்றனர். திருமண விடயங்கள், ஆலயப் பிரவேசத்தில் தடை, தண்ணீரைப் பெற்றுக்கொள்ளல், தொழில் மற்றும் நில விற்பனையில் பாகுபாடு, கலாச்சார விடயங்களில் புறமொதுக்கம், மேலும் கல்வி மற்றும் சமூக அந்தஸ்தின்மை போன்ற இன்னோரன்ன வழிகளில் பாகுபாட்டிற்குள்ளாகின்றமை தெளிவாகின்றது.

## 8. முடிவுரை

தென்னாசிய சமூகங்களில் சமூக அடுக்கமைவினைத் தீர்மானிக்கும் காரணிகளில் ஒன்றாக சாதி முறைமை காணப்படுகின்றது. இலங்கையில் ஆரம்பகாலத்திலிருந்தே சாதிமுறைமை இருந்து வருவதாக கண்டறியப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள சிங்களவர்கள், தமிழர்களிடையே சாதி முக்கிய ஒன்றாகக் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள இந்துத் தமிழர்களிடையே காணப்படும் சாதிமுறைமையானது இறுக்கமானதொன்றாகப் பார்க்கப்படுகிறது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் காரைநகர் பிரதேசத்தில் சாதிமுறைமையினை மக்கள் இறுக்கமாகப் பின்பற்றுவதால் அதனால் உயர்வு, தாழ்வு ஏற்பட்டு அதனடிப்படையில் பல்வேறு விளைவுகள் மக்கள் மத்தியில் ஏற்படுகின்றன. சமூக அடுக்கமைவினைத் தீர்மானிப்பதாக சாதி அமைந்திருந்தாலும், இம்முறைமை சமூகத்திற்கு நன்மை அளிப்பதாக இல்லை. மாறாக சமூகத்தில் ஒரு சாரர் மேன்நிலைப்படுத்தப்பட்டும் ஏனையோர் சமூகத்தில் புறக்கணிப்பிற்கும் உள்ளாகின்றனர். இதனடிப்படையில் காரைநகரில் உயர்சாதியினரால் தாழ்த்தப்பட்ட சாதியினர் இன்னோரன்ன வழிகளில் பாகுபாட்டிற்கு உள்ளாகின்றமையை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. காரைநகர் சாதியமைப்பு ஒரு ஒழுங்கிலமைந்த அடுக்கமைவினை உடையதாக காணப்படுகின்றது. இதனடிப்படையில் உயர்வு தாழ்வு போற்றப்படும் நிலை இயல்பாகவே காணப்படுகின்றதெனலாம். இங்கு காணப்படும் சாதிகளை உயர்நிலைச் சாதிகள், இடைநிலைச் சாதிகள் மற்றும் தாழ்த்தப்பட்ட சாதிகள் என்ற வகைப்பாட்டினுள் உள்ளடக்கமுடியும். வெள்ளாளர் மற்றும் பிராமணர் தவிர்ந்த ஏனைய சாதிகள் இங்கு சமூக அந்தஸ்தில் குறைத்து மதிப்பிடப்படும் தன்மை காணப்படுகின்றது. காரைநகரில் இன்றும் கூட பலர் தாழ்த்தப்பட்டவர்களாகவும், குறைந்தவர்களாகவும் சாதியின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றனர். பொருளாதார ரீதியாக உயர்வானவர்கள் சாதியில் தாழ்ந்தவர் எனின் சமூகத்தில் தாழ்ந்தவராகவே பார்க்கப்படுகின்றனர். குறிப்பாக வெள்ளாளர் சாதியினர் தொடர்ச்சியாக தமது அதிகாரத்தை நிலைநாட்டக் கூடியவர்களாக காணப்படுகின்றனர்.

சாதி என்பது சமூகத்தில் காணப்படும் ஒரு அடுக்கமைவாகும். பொருளாதார ரீதியாக மாத்திரமல்லாது அந்தஸ்தின் அடிப்படையில் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் பேணப்பட்டு வருகின்றன. இவ்வாறு நோக்குமிடத்து சாதியினடிப்படையில் அமைந்துள்ள அடுக்கமைவினை விளங்கிக் கொள்வதற்கு வெபரின் சமூக அடுக்கமைவுக் கோட்பாடு பொருத்தமான ஒன்றாகும். வகுப்பிற்கும் (Class) சாதிக்கும் இடையிலான பிரதான வேறுபாடும் இங்கு தெளிவாகின்றது. வகுப்பில் ஒரு அடுக்கில் இருந்து இன்னொரு அடுக்கிற்கு மேற்செல்லவும் முடியும் அதேபோன்று கீழ்வாரியாக படிப்படியாக வகுப்பில் கீழ்நிலைக்குச் செல்லவும் இயலும். ஏனெனில் வகுப்பு

முற்று முழுதாக பொருளாதார காரணியினால் மாத்திரமே நிர்ணயிக்கப்படுகின்றது. ஆனால் சாதியில் கீழுள்ளவர்கள் மேற்செல்லவோ, மேலுள்ளவர்கள் கீழ்நிலைக்குச் செல்லவோ முடிவதில்லை. ஏனெனில் பிறப்பு ரீதியாகவே தீர்மானிக்கப்படுகின்றது. ஒருவனின் சாதிக்கான அங்கத்துவம் மாற்றப்படமுடியாத ஒன்றாகும். நிர்ணயிக்கப்பட்ட அடுக்கமைவின் அடிப்படையிலே சமூக அந்தஸ்து தீர்மானிக்கப்படுகின்றது. எனவே இங்கு சாதியின் அடிப்படையில் வழங்கப்படும் அந்தஸ்தானது மேல்நிலையில் உள்ளோர்க்கு சாதகமாகவும், சாதியின் அடுக்கமைவில் அடிமட்டத்தில் உள்ளோர் சமூக அந்தஸ்தினை இழப்பதற்கும் வழிகோலுகின்றது எனலாம்.

## உசாத்துணைகள்

Balasundaram, S., Chandrabose, A. S. and Sivapragasam, P. P. (2009). 'Caste Discrimination among Indian Tamil Plantation Workers in Sri Lanka'. In: Silva, KT., Sivapragasam, P.P. & Thanges, P. [eds.]. *Casteless or Caste-blind: Dynamics of Concealed Caste Discrimination, Social Exclusion and Protest in Sri Lanka.* Colombo: Kumaran Book House. 78-96.

Chitty, S.C. (1988). *The Castes Customs Manners and Literature of the Tamils.* Delhi: Asian Educational Services.

Lanka Newspapers. (2008, January 27). Caste System in Sri Lanka, (2008). Retrieved on February, 7, 2016, from: http://www.lankanewspaper.com/news/2008/1/24067space.html.

Rao, J. (2010). *The Caste System: Effects on Poverty in India, Nepal and Sri Lanka*. Available in the Research Gate. URL: https://www.researchgate.net/publication/265399020_The_Caste_System_Effects_on_Poverty_in_India_Nepal_and_Sri_Lanka

Silva, K.T., Kotikabadde, P. and Abeywickrama, D.M.N.C. (2009). 'Caste Discrimination in Sinhala Society'. In: Silva, KT., Sivapragasam, P.P. & Thanges, P. [eds.]. *Casteless or Caste-blind:Dynamics of Concealed Caste Discrimination, Social Exclusion and Protest in Sri Lanka.* Colombo: Kumaran Book House. 29-49.

Thangesh, P. (2008). *Caste and Social Exclusion of IDPs in Jaffna Society*. Department of Sociology. Sri Lanka. University of Colombo. Research & Publication. E-repository: URL: http://archive.cmb.ac.lk:8080/research/handle/70130/1102

தங்கேஸ், ப. (2013). *யாழ்ப்பாணத் தமிழர் கலாச்சாரத்தில் சாதியமும் இனத்துவமும்.* United Kingdom: Ezhuna Media Foundation.

வெகுஜனன் மற்றும் இராவணா. (2007). *இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்.* Chennai: South Vision.

அகத்தியலிங்கம், சு. பொ. (2004). *சாதியம்: வேர்கள் - விளைவுகள் - சவால்கள்:* சென்னை: பாரதி புத்தகாலயம்.

அம்பேத்கார். (2011). *இந்தியாவில் சாதிகள்.* கோயம்புத்தூர்: புத்தா வெளியீட்டகம்.

சிவத்தம்பி, கா. (1993). *யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக்கொள்ளல்.* கொழும்பு: தர்சனா பிரசுரம்.

பக்தவத்சலபாரதி. (1999). *பண்பாட்டு மானிடவியல்.* புதுச்சேரி: புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்.

## நேர்காணல் விபரம்

01. நமசிவாயம் தேவராசா (வயது - 55). பலகாடு
02. ராசமலர் (வயது - 56). சயம்பு.

*03.* சுந்தரலிங்கம், (வயது - *58*). சின்னாலடி.
*04.* மார்க்கண்டு பாலசுப்பிரமணியம் (வயது - *57*). சந்தம்புளியடி.
*05.* முருகேசு கனகம்மா (வயது - *78*). ஊர்ப்பெரியார். பலகாடு.
*06.* மகிந்தா நாகரத்தினம் (வயது - *16*). கல்லந்தாழ்வு.
*07.* சுகிர்தா (வயது - *26*). கோவளம்.
*08.* ரத்தினசபாபதி (வயது - *88*). தோப்புக்காடு.
*09.* துரைசிங்கம் ராணி (வயது - *58*). வியாவில்.
*10.* சிவபாக்கியம் (வயது - *70*). பலகாடு.
*11.* கணேஷ் (வயது - *65*). வியாவில்.